தமிழ்நாட்டில்சுயேச்சையாளருக்குஇடமில்லை

Registered as a Newspaper in Ceylon ★ விலைசதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49

மலர் 9
போன் : 389

National Tamil Daily

இதழ் 1[?]
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பராபவ மாசி 13 ஜால்கஃ 14 சனிக்கிழமை 25-2-67

## பலர் ஜாமீன் இழந்தனர்

சென்னை, பெப். 24

**தமிழ்நாடு சட்டசபைத் தொகுதியில் சுயேச்சையாகப்போட்டியிட்ட பலர்தோற்கடிக்கப்பட்டுள்ளனர்.**

தமிழ்நாடு [ராஜ்ய] சட்டசபைத் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்ட 243 பேரில், ஏழுபேர் மட்டுமே வெற்றிபெற்றிருக்கின்றனர்.

வெற்றிபெற்றவர்களில் மூவர் முஸ்லிம்லீக் கட்சி ஆதரவைப் பெற்றிருந்தனர். மற்றைய மூவர் கூட்டணியின் ஆதரவைப் பெற்றிருந்தனர். ஒருவர் மட்டுமே கட்சி ஆதரவு பெறுமல் வெற்றி பெற்றுள்ளார்.

சுயேச்சையாகப் போட்டியிட்டவர்களில் பெரும்பான்மையினர் ஜாமீன் தொகையை இழந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

—

ஹைதராபாத் பெப். 25

உலகிலேயே மிகவும் செல்வந்தர்களுள் ஒருவராக விளங்கிய ஹைதராபாத் நிஸாம் நேற்று பிற்பகல் காலமானார். அவருக்கு வயது 80.

# அவகாசம்கேட்கிறர் அண்ணு மந்திரிசபை அமைக்க

## "கூட்டணியினர் இல்லை; மந்திரி சபையில் பெண்கள் உண்டு"

### "பஸ்சேவை தேசியமயம்; ஆங்கிலம் இணைப்பு மொழி; மதுவிலக்கு தீவிரம்; குதிரைப்பந்தயம் நடை"

சென்னை, பெப். 22

திரு. சி. என். அண்ணுதுரையை முதன்மந்திரியாகக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் புதிய மந்திரிசபை தமிழ்நாட்டின் ஆட்சி நிர்வாகப்பொறுப்பை இன்னும் இரண்டு வாரங்களின்பின்னரே ஏற்றுக்கொள்ளும். தமிழ் நாட்டின் முதன் மந்திரியாக தாமே பதவியேற்கப்போவதாகத் தெரிவித்திருக்கும் திரு. அண்ணுதுரை, தாம் மந்திரிசபை அமைப்பதற்கு குறைந்தது இரண்டுவார காலமாவது அவகாசம் தேவை என்று கூறியிருக்கிறுர்.



### ஆதித்தன் வெற்றி

சென்னை, பெப்.24

'நாம் தமிழர்' கட்சித்தலைவரும் பத்திரிகை முதலாளியுமானதிரு. சி. பா. ஆதித்தனர் ஸ்ரீவைகுண்டம் தொகுதியிலிருந்து தமிழ் நாடு சட்ட சபைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் தி. மு. க. அபேட்சகராகப் போட்டியிட்டார்.

ஸி. என், அண்ணுதுரை

### காங்கிரஸின் காபந்து மந்திரிசபை

திரு. பக்தவத்சலம் தலைமையில் இதுவரை ஆட்சி பீடத்திலிருந்த காங்கிரஸ் மந்திரிசபை இன்றுகாலை தமிழ்நாடு கவர்னர் சர்தார் உஜ்ஜல்சிங்கிடம் தனது ராஜினுமைவைச் சமர்ப்பித்தது. ராஜினுமைவை ஏற்றுக்கொண்ட கவர்னர் புதிய அரசாங்கம் பதவியேற்கும் வரை, நாட்டின் நிர்வாக ஆட்சிப்பொறுப்பை தற்காலிகமாகக் கவனித்துக்கொள்ளும்படி திரு. பக்தவத்சலம் மந்திரிசபையைக் கேட்டுக்கொண்டார். அடுத்தமாதம் முதல் திகதிக்குப்பின் தேர்தலில் பெரும்பான்மைப்பலம் பெற்றுள்ள கட்சியின் தலைவரை அழைத்து ஆட்சிப்பொறுப்பை ஏற்கும்படி கேட்டுக்கொள்ளப்போவதாகவும் கவர்னர் தெரிவித்தார்.

### தி. மு. க. சட்ட சபைக்குழு ஞாயிறன்று கூடுகிறது

தமிழ்நாடு சட்டசபைக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள திராவிட முன்னேற்றக்கழகத்தைச்சேர்ந்த அங்கத்தவர்களைக் கொண்ட தி. மு. க. சட்டசபைக்குழு இம்மாதம் 26-ந் திகதி பிற்பகல் 4 மணிக்கு சென்னை நகரில் கூடவிருக்கிறது. சட்டசபைக்குழுவின் முறையான தலைவர் ஒருவரைத் தெரிவுசெய்வதற்காகவே இக்கூட்டம் நடைபெறுகிறது. இக்குழுவின் தலைவராகத் தெரிவுசெய்யப்படுபவரே புதிய அரசாங்கத்தின் முதன் மந்திரியாகப் பதவியேற்பார்.

### நெடுஞ்செழியன் வெற்றி

சென்னை, பெப். 25

தமிழ்நாடு சட்டசபைத் தேதர்லில் இரா. நெடுஞ்செழியன் வெற்றி பெற்றுள்ளார்.



திருவல்லிக்கேணித் தொகுதியில் போட்டியிட்ட நெடுஞ்செழியன் காங்கிரஸ் அபேட்சகர் ஒருவரையும் ஜனசங் அபேட்சகர் ஒருவரையும் தோற்கடித்துள்ளார்.

இவர் தமிழ்நாடு சட்டசபை எதிர்க்கட்சித்தலைவராகவிருந்தது குறிப்பிடத்தக்கது.

### தி. மு. க. அரசாங்க கொள்கைஅண்ணுவிளக்கம்

தமிழ்நாட்டில் ஆட்சி நிர்வாகப்பொறுப்பை ஏற்கவிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சொள்கை பற்றி அதன் தலைவர் திரு. சி. என். அண்ணுதுரை இன்று காலை பத்திரிகை நிருபர்கள் மத்தியில் விளக்கிக் கூறினுர்.

தமிழ்நாட்டில் அமைக்கப்படவிருக்கும் தி. மு. க மந்திரிசபைக்குத் தாமே தலைமைதாங்கப்போவதாக திரு. அண்ணுதுரை தெரிவித்தார் அதாவது அவரே தமிழ்நாடு முதன் மந்திரியாகப் பதவியேற்பார், தென் சென்னையிலிருந்து லோகசபைக்குப் போட்டியிடும் திரு. அண்ணுதுரை தமிழ்நாடு சட்டமன்ற இருசபைகளில் (கீழ்சபை, மேல்சபை ஏதாவது ஒரு சபைக்குப் போட்டியிடப்போவதாகவும் தெரிவித்தார். புதிய மந்திரி சபை அமைப்பது பற்றி ஆலோசனை செய்வதற்குக் குறைந்தது இரண்டு வாரங்களாவது தமக்கு அவகாசம் தேவை என்று திரு. அண்ணுதுரை சொன்னுர். இதுவரைஇருந்த காங்கிரஸ் மந்திரி சபையைவிடத் தி. மு. க. மந்திரிசபை அளவில் பெரியதாக இருக்கும் என்று அவர் கூறினுர். மந்திரிகளிடம் அளவுக்கதிகமான பொறுப்புக்களைச் சுமக்கவிடத் தாம் விரும்பவில்லையென்றும் அவர் சொன்னுர் தமது மந்திரி சபையில் பெண்களும் நிச்சயமாக இடம் பெறுவர் என்றும் திரு. அண்ணுதுரை கூறினுர்.

(6-ம் பக்கம் பார்க்க)

### இந்திய நிதி, உணவு மந்திரிகள் தோல்வி

#### சஞ்சீவையா' மெரார்ஜி கபீர் வெற்றி: ரங்க , ஆனேதோல்வி

புதுடில்லி, பெப். 23

இந்திய யூனியன் நிதிமந்திரி சசீந்திர சௌத்ரி, யூனியன் உணவு மந்திரி திரு. ஸி. சுப்பிரமணியம், யூனியன் ரயில் மந்திரி எஸ். கே. பட்டீல், யூனியன் கைத்தொழில் மந்திரி டி. சஞ்சீவையா ஆகிய மத்திய மந்திரிகள் தோல்வியடைந்துள்ளனர். திட்ட மந்திரி அசோக் மேத்தா, பாதுகாப்பு மந்திரி சர்தார் சுவர்ண்சிங் ஆகியோர் வெற்றிபெற்றிருக்கின்றனர்.

முன்னுள் இந்திய யூனியனமந்திரி திரு. மொரார்ஜி தேசாய் சூரத் தொகுதியிலிருந்து லோகசபைக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறுர். சுதந்திரக்கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. என். ஜி. ரங்கா சித்தூர் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகர் என். செங்கல்வராயநாயுடுவிடம் 28,000 வாக்குகளால் தோல்வியடைந்தார். சுயேச்சையாகப் போட்டியிட்ட இலங்கையில் முன்பு இந்திய ஹைகமிஷனராக இருந்த திரு. எம். எஸ். ஆனே தோல்வியடைந்தார். தமிழ்நாட்டில் லோகசபைத் தேர்தல் முடிவுகள் உத்தியோகபூர்வமாக நாளைதான் வெளியிடப்படும். எனினும் முடிவுகள் வெளிவரத் தொடங்கிவிட்டன. மத்திய உணவு மந்திரி திரு. ஸி. சுப்பிரமணியம் 50,000 வாக்குகளால் தோல்வியடைந்துள்ளார் [illegible]

### லோகசபை கட்சி நிலை

புதுடில்லி, பெப்ரவரி 24

இந்தியப் பார்லிமெண்ட் [லோகசபை] முடிவுகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இதுவரை வெளிவந்த முடிவுகளின்படி கட்சிநிலை வருமாறு-

| | |
|---|---|
| காங்கிரஸ்: | 125. |
| ஜனசங்: | 22. |
| கம்யூனிஸ்ட்: (மார்க்ஸிய) | 10. |
| கம்யூனிஸ்ட்: | 05. |
| சுதந்திரா: | 22. |
| சுயேச்சை: | 20. |
| சம்யுக்த சோஷலிஸ்ட்: | 08. |
| பிரஜா சோஷலிஸ்ட்; | 01. |
| இதரகட்சிகள் | 11. |

இதுவரை வெளிவந்த மொத்த ஸ்தானங்கள்- 224.
லோகசபை மொத்த ஸ்தானங்கள்- 521.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பாவிகளைப் பரிசுத்தப்படுத்துவரென்று ஆண்டவனைப் புகழ்ந்து வணங்கும் இந்துக்கள், தங்கள் சமூகத்தில் பிறந்த எவரையும் பாபி அல்லது தீண்டாதவர் என்று கருதி ஒதுக்குவது அவர்களுக்கு மட்டுமன்றி ஆண்டவனுக்கே செய்யும் பெரும் பாவமுமாகுமல்லவா?

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna.
Telephone: 389.

யாழ்ப்பாணம் பராபவ வூ மாசி மீ 13 (25-2-67)


## தமிழ்நாட்டின் தீர்ப்பு

சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் தமிழ்நாட்டில் அமைதியான புரட்சி நிகழ்ந்திருக்கிறது. கத்தியின்றி மக்களின் வாக்குரிமையென்ற பொன்னான ஆயுதத்தினால் இந்த ஜனநாயகப் புரட்சி நடைபெற்றிருக்கிறது. சுதந்திரத்தின்பின் தமிழ்நாட்டில் ஆட்சி பீடத்தில் சுமார் இருபதாண்டு காலம் அமர்ந்திருந்தகாங்கிரஸை தமிழ்நாட்டு மக்கள் அமைதியான முறையில் அகற்றியிருக்கிறார்கள். இது ஜனநாயகத்தின் வெற்றி.

தமிழ்நாடு தேர்தலில் காங்கிரஸ் அக்கிராஸனர் திரு. காமராஜ் தோல்வியடைந்தது உண்மையிலேயே அதிர்ச்சியளிக்கக் கூடிய சம்பவம்தான். தியாகியும் தொண்டரும் உழைப்பால் உயர்ந்த மேதையுமான காமராஜர் தேர்தலில் தோல்வியடைந்துவிட்டதால் அவரது சேவை இந்திய மக்களுக்குக் கிடைக்காமல் போகக்கூடாது. திரு. காமராஜரின் உழைப்பை மத்திய அரசாங்கம் எப்படியும் பயன்படுத்துமென எதிர்பார்ப்பது மிகையல்ல.

திராவிட முன்னேற்றக்கழகத்திடம் தமிழ்நாட்டின் ஆட்சி நிர்வாகப் பொறுப்பை தமிழ்நாட்டு மக்கள் ஒப்படைத்திருக்கின்றனர். மக்கள் வைத்த நம்பிக்கையை தி. மு. க. சரியான முறையில் பயன்படுத்தும் என எதிர்பார்க்கலாம். தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஆட்சியை வீழ்த்துவதற்காக தி. மு. கழகம் இதர எதிர்க்கட்சிகள் பலவற்றுடன் சேர்ந்து கூட்டணி அமைத்துத் தேர்தலில் போட்டியிட்டபோதிலும் அரசாங்கம் அமைப்பதற்கான அறுதியான பெரும்பான்மைப் பலம் கழகத்துக்குக் கிடைத்திருக்கிறது. கூட்டணியில் சேர்ந்த கட்சிகளின் உதவியின்றியே தி. மு. க. அரசாங்கம் அமைக்கலாம். தி. மு. க. தனித்து அரசாங்கம் அமைக்கவிருக்கிறதென்றும் இதற்கு கூட்டணிக் கட்சிகளின் அங்கீகாரம் ஏற்கனவே கிடைத்திருக்கிறதென்றும் தி. மு. க. தலைவர் திரு. அண்ணாதுரை தெரிவித்திருக்கிறார். ஒரே கொள்கையுடனும் நோக்கத்துடனும் செயலாற்றுவதற்கு இது நல்லதுதான். ஆயினும் தி. மு. கழகத்துக்கு அறுதியான பெரும்பான்மைப் பலம் கிடைத்ததால் தேர்தலில் வெற்றிபெற ஒத்துழைத்த கூட்டணி கட்சிகளைப் புறக்கணித்துவிட்டுத் ''தான்தோன்றித்தனமாக'' நடக்க முற்பட்டுவிட்டதென்ற அவச்சொல்லுக்கு இடம் வைப்பது நல்லதல்ல. இதேசமயம் தி. மு. கழகத்துக்கு ஆட்சி நிர்வாகத்தில் அனுபவம் இல்லை என்ற சிலரின் கூற்றையும் நினைவில் கொள்வது பயன்தரலாம். இந்தியாவின் முதிர்ந்த அரசியல் அறிஞர் ராஜாஜியினது ஆதரவும் தமிழ்நாட்டின் பழம்பெரும் தேசபக்தர்களில் ஒருவரான ம. பொ. சிவஞான கிராமணியாரின் ஒத்துழைப்பும் தி. மு. கழகத்துக்கு இருக்கிறது. இவை கழகத்தின் நிர்வாகம் சிறப்படைவதற்கு அனுகூலமாக இருக்குமென எதிர்பார்க்கலாம். தமிழ்நாட்டில் பிரச்னைகள் பல உள. இவற்றுக்குத் தீர்வு காண்பதற்கு நிதானமும் விவேகமும் தேவை. கழகம், ராஜாஜி போன்ற அறிஞர்களின் அனுபவ ரீதியான ஆலோசனையுடனும் இதர கட்சிகளின் உதவியுடனும் மத்திய அரசாங்கத்தின் ஒத்துமைப்புடனும் பிரச்னைகளுக்குச் சிறந்த முறையில் தீர்வு காணுமென்று எதிர்பாக்கலாம்.

தமிழ்நாடு இலங்கையின் அருகே இருக்கும் நாடு. இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்குமிடையில் பண்டைக்காலம் தொட்டு பலவழிகளிலும் உறவும் தொடர்பும் இருந்துவந்திருக்கிறது. அரசியல் காரணமாக இங்கு சிலர் தமிழ்நாட்டுத் தலைவர்களை குறிப்பாக தி. மு. கழகத்தவர்களைக் கண்டு அஞ்சுவதும் மக்கள் மத்தியில் அச்சமூட்டுவதும் சாதாரணமாகிவிட்டது. இதற்குக் காரணம் இலங்கைஅரசாங்கத்துக்கும் இந்திய ராஜ்ய அரசாங்களில் ஒன்றான தமிழ்நாட்டு அரசாங்கத்துக்குமிடையில் தொடர்பு இல்லாதிருந்ததுதான். இலங்கைக்கும் தமிழ்நாட்டு அரசாங்கத்துக்குமிடையில் நெருங்கிய தொடர்பு இருக்காவிட்டாலும் இருநாட்டு அரசாங்க மந்திரிகளுக்குமிடையில் தனிப்பட்ட முறையிலாவது உறவும் தொடர்பும் இருந்திருக்குமாயின் இங்கு வீண் சந்தேகங்களுக்கு இடமிருந்திருக்காது. தமிழ்நாட்டில் தி. மு. க. மந்திரிகள் இலங்கை மந்திரிகளுடன் தனிப்பட்ட முறையிலாவது நட்புறவு கொள்வார்களென்று நம்பலாம்.

இலங்கை—இந்திய ஒப்பந்தம

# தமிழரசுக்கட்சியின் திருத்தங்களை ஏற்கபிரதமர் ஒப்புக்கொண்டுள்ளார்

## ஒப்பந்தத்தைஆதரித்ததற்கு அமிர்தலிங்கம் விளக்கம்


மாவிட்டபுரம், வெள்ளி

''கட்டாய நாடுகடத்தல் அமுலாக்கப்படுமானால் அதனை எதிர்த்துப் போராட நாம் தயங்கமாட்டோம்'' என்று உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் தெல்லிப்பழையில் நடைபெற்ற தமிழரசுக்கட்சிக் கிளை ஆண்டுவிழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

தெல்லிப்பழை தமிழரசுக் கட்சிக் கிளையின் மூன்ருவது ஆண்டுவிழா திரு, வ. சரவணமுத்து தலைமையில் நடைபெற்றது. அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் தொடர்ந்து பேசியதாவது-

''உலகின் மனித உரிமைச் சாஸனத்துக்கு மாருக இந்நாட்டில் உள்ள இந்திய வம்சாவளியினரை கட்டாயமாக நாடு கடத்தும் திட்டத்தை நாம் ஒருபோதும் அனுமதிக்காமாட்டோமென்று தமிழ் எம். பி. க்கள் திட்டவட்டமாக ஒரு மனத்துடன் கூறியிருக்கின்றனர்.

மாவட்டசபை அமைப்பது சம்பந்தமாகச் சில பிரச்னைகள் உண்டு. வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஒரு கருத்தும், தென்னிலங்கையில் வேறு கருத்துக்களும் நிலவுகிறது. கடந்தவாரம் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பிரதமர் திரு. டட்லியைச் சந்தித்து நிலைமையை விளக்கியிருக்கின்ருர். பிரதமர் மாவட்ட சபையைக் கொண்டுவர வாக்குத் தந்துள்ளார். அவர் அதனை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.''



### ஏன் ஆதரித்தோம்?

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது: ''இலங்கை இந்தியர் பிரச்னை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. இத்தொழிலாளர்களைப் பற்றி சிங்கள அரசியல்வாதிகள் டொனமூர் திட்டத்துக்கு முன்பே பீதியடைந்தனர். பயம் ஒருபுறம். தொழிலாளர்களின் உழைப்புத் தேவை ஒருபுறம். காலஞ்சென்ற பண்டாரநாயக்கா முதலானோர் தொழிலாளர்கள் வருவிக்கப்படவேண்டும் என்று அப்போதே கூறினர்.

உரிமைகளை வழங்காது வெறும் உடலுழைப்புக்காகத் தொழிலாளர்களை இலங்கைக்கு அழைப்பதை இந்திய அரசாங்கம் 19ε9ம் ஆண்டு நிறுத்தியது.

1939ம் ஆண்டுக்கு முன் வந்தவர்களில் எத்தனை பேருக்கு வாக்குரிமை கொடுக்கவேண்டும் என்ற பிரச்னை பற்றி 1940ம் ஆண்டில் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. 1948ல் இலங்கை சுதந்திரமடைந்தது. இதற்கு ஓர் ஆண்டுக்கு முன்பு இந்தியா சுதந்திரமடைந்தது. 1948ம் ஆண்டிலே தான் பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இலங்கைப் பிரஜாவுரிமைச்சட்டத்தில் 1948ம் ஆண்டுக்கு முன் இலங்கையில் இரண்டு சந்ததியினராக இருந்தால் அவர்களுக்கு உரிமை வழங்குவதாகத் தெரிவித்தது. இச்சட்டத்தை இரு தமிழ்த் தலைவர்களும் எதிர்த்துப் பேசினர்கள். இந்தச் சட்டம்தான் தமிழ்பேசும் மககளைச் சந்தேகக்கண்ணுடன் வாழும் நிலைக்குக் கொண்டு வந்தது. 1948 டிசம்பரில் இந்தியர்-பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அரசாங்கத்தில் தமிழ்க்காங்கி[illegible]டது.

இச்சட்டத்தை எதிர்த்து திரு. செல்வநாயகம் பேசினார். இச்சட்டத்தின் விளைவாக 9 லட்சம் மக்கள் நாடற்றவர்களாகக்கப்பட்டார்கள். இச்சட்டத்தை இந்திய அரசாங்கம் எதிர்த்தது. மலைநாட்டு மக்களின் ஸ்தாபனங்கள் எதிர்த்தன. பலனென்றுமே கிடைக்கவில்லை. 1953ல் டட்லி-நேரு ஒப்பந்தமும், 1954ல் சேர் ஜோன் கொத்தலாவல-நேரு ஒப்பந்தமும் ஏற்பட்டன. முறிந்தன. இதன் பின் எத்தனையோ பிரச்னைகள் ஏற்பட்டு, 1964ல் இந்தியப் பிரதமர் திரு. லால் பகதூர் சாஸ்திரியும், திருமதி சிறிமா பண்டாரநாயக்காவும் ஒப்பந்தம்செய்தனர்.

பிரதமர் சிறிமா நாடு திரும்பியதும், ஐந்தேகால் லட்சம் மக்கள் நாடுகடத்தப்படுவார்களென்று அறிக்கை விட்டார். இதனை எதிர்த்து தமிழரசுக்கட்சி அறிக்கைவிட்டது. தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னரே சிறிமா. சாஸ்திரி ஒப்பந்தம் பற்றித் தெரிய வந்தது. இவர்களது ஒப்பந்தத்தில் கட்டாய நாடுகடத்தல் பற்றியோ, தனிவாக்காளர் இடாப்புப் பற்றியோ எவ்விதமும் குறிப்பிடவில்லை. கட்டாய நாடுகடத்தல், தனிவாக்காளர் இடாப்பு என்பன அமுல் நடத்தப்படுமாயின் ஒப்பந்தம் முறிந்துவிடுமென்று இந்திய அரசாங்கம் தெளிவுபடுத்தியிருந்தது. எனவேதான் கட்டாய நாடுகடத்தல் இல்லாத, தனிவாக்காளர்இடாப்புமுறை இல்லாத இந்த ஒப்பந்தத்தை நாம் ஆதரித்தோம். நமது திருத்தங்கள் சிலவற்றை ஏற்கப் பிரதமர் ஒப்புக்கொண்டுவிட்டார்.

### நாகநாதன் மகிழ்ச்சி

தமிழரசுக் கட்சித் தலைவர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் பேசுகையில் இந்தியாவில் தமிழ்ப்பண்பாடு கலாச்சாரம் என்பனவற்றைப் பேணக்கூடிய அரசாங்கம் பதவிக்குவரும் நிலையையிட்டு நாம் மிக்கமகிழ்ச்சிகொள்கிருேம் என்ருர்.

பட்டிருப்பு எம். பி. திரு. எஸ். எம். இராசமாணிக்கம் பேசுகையில், நமக்குள் கருத்துவேறுபாடுகள் ஏற்படலாம், பிரச்னைகளைக் கலந்து பேசி விவாதித்து முடிவு காண்பது விவேகமானது என்று கூறினர்.

(6-ம் பக்கம் பார்க்க)

[5-ம் கலத்தொடர்ச்சி]

எங்கே போவேனுயிடினும் அங்கே வந்தென் மனத்தீராய்ச், சங்கையொன்றுமின்றியே தலைநாள் கடைநாளொக்கவே, கங்கை சடைமேற் கரந்தானே கலைமான் மறியுங் கனல் மழுவும், தங்குந் திரைக்காவிரிக் கோட்டத்தை யானுடைய அடிகேளோ!

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்

[அடியேன்எங்கே செல்வேனுயினும் முதல் நாளும் இறுதிநாளும் ஒரு பெற்றியவாக சிறிதும் ஐயம் இன்றி அங்கே வந்து என்மனத்தில் இருப்பீராய், சடைமேற் கங்கையும் கையில் மானின் ஆண்கன்றும் சுடுகின்ற மழுவுமாய்த் தங்குகின்ற, அலைகளையுடைய காவிரியாற்றங் கரைக்கண் உள்ள திருவையாற்றை உமதாக உடைய அடிகேள் ஓலம்!]

# ஐயாறன் எழுதுகிறது

முந்தாநாள் இரவு 11 மணி இருக்கும். திடீரென 'பட பட' என்று வெடிச் சத்தம் கேட்டது. ஏதோ கல்யாணமோ, கோவில் திருவிழாவோ என்று நினைத்தேன். பிறகு பல பக்கங்களிலிருந்தும் பட பட பட பட வென்று வெடிகள் நீண்ட நேரத்துக்கு வெடித்தன. புதுவருடப் பிறப்பன்றுகூட இவ்வளவுவெடிச் சத்தம்இல்லை. சற்று நேரத்துக்கெல்லாம் பலர் வந்து 'எம். ஜி. ஆர். வாழ்க' 'எம், ஜி. ஆர். வாழ்க' என்று ஆரவாரங்கள் செய்தார்கள். அப்போதுதான் தெரிந்தது, இந்த வெடிகளெல்லாம் எம். ஜி. ஆர். தேர்தலில் வென்றதை முன்னிட்டுச்செய்த மகிழ்ச்சி ஆரவாரமென்று.

இங்குள்ள பொது மக்களுக்குத்தான் எம். ஜி. ஆர். மீது எவ்வளவுஅன்பு! இந்தக் காட்சிகளை சென்னை ஆஸ்பத்திரியிலுள்ளஅவர் பார்த்திருக்கவேண்டும். பார்த்தால் அவர்உள்ளம் எவ்வளவு குளிரும்! இங்கேயே இவ்வளவு சந்தோஷ ஆர்ப்பாட்ட முள்ளதே. சென்னையிலே, பறங்கிமலையிலே இன்னும் எப்படி இருக்கும்!

••

ஈழத்திலே தமிழர்மட்டுமல்ல, சிங்களப் பொதுமககளின் அன்பையும் எம். ஜி. ஆர். அமோகமாய்ப் பெற்றிருக்கிருர். அவர் சென்ற வருடம் இலங்கை வந்திருந்தபோது பிரதமர் டட்லி சேனநாயகாவும் வேறு மந்திரிகளும் அவரை வரவேற்று உபசரித்தனர். இராணுவத்தைக்கொண்டு அவரது வரவேற்பில் ஒழுங்குசெய்யச் செய்தனர். யாருக்குமில்லாத ராஜோபசாரம் அவருக்கு நடந்துள்ளதையெல்லாம் நினைக்கையில், இங்கும் அவருக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கிறதென்பது தெரியும்.

எம். ஜி. ஆரை கொழும்பில் வரவேற்றதற்காக நமது பிரதமரை சிலர் பார்லிமெண்டிலே குறைகூறினர். தினு மூனு கானு தலைவர்களை பிரதமர் வரவேற்பதாயும், அதனுல் இயிங்கைக்கு பெரிய ஆபத்து வந்துவிடப்போவதாகவும் கூச்சல்போட்டனர்.

இப்போது தமிழகத்திலே தி. மு. க. ஆட்சி ஏற்பட்டுவிட்டதைப் பற்றி, இந்த தூற்றல் துரும்புகளுக்கு எப்படி இருக்கும்! வெறும் வாயை மெல்லுகிறவர்களுக்கு அவல் கிடைத்துள்ளது.

ஆனுல் நல்லவேளையாக நமது பிரதமர் டட்லிக்கு எம். ஜி. ஆரின் நட்பும் தொடர்பும் கிடைத்துள்ளதால், அவருக்கு எவ்வித தப்பெண்ணமும் இருக்க முடியாது. இந்தப் பூச்சாண்டிகளைக்கேட்டு அவர் பயப்படவும்மாட்டார். இதற்கு மாருக, இனி தமிழ்நாட்டு தி. மு. க. ஆட்சியாளருக்கும் நமது பிரதமருக்கும் எம். ஜி. ஆர். மூலம் அதிக நெருங்கிய தொடர்பு ஏற்படக்கூடும்.

இதுவரை சென்னை ஆட்சியாளருக்கும் இலங்கைக்கும் எவ்வித தொடர்புமில்லை. முதல் அமைச்சர் பக்தவத்சலம் முதலியவர்கள் இந்தப் பக்கம் எட்டிப்பார்க்கவுமில்லை. இனி அவ்விதமின்றி இருதரப்பினரும் அதிக தொடர்புகொண்டால் வீண் சந்தேகங்களும், பீதிகளும் தீரும். இருநாடுகளுக்கும் நல்லுறவும் பலப்படும். நடப்பதெல்லாம் நல்லதுக்குத் தானே!

[4-ம் கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழு ராஜ்யங்களில் காங்கிரஸ் ஆட்சி: பஞ்சாப், ராஜஸ்தானில் ஸ்திரமற்ற நிலை

## ஒரிஸாவில் சுதந்திரா முன்னணி; தமிழ்நாட்டில் தி. மு. க. ஆட்சி

### மேற்குவங்காளத்தில் ஆட்சி அமைக்க காங்கிரஸுடன் சிலகட்சிகள் இணையலாம்

புதுடில்லி, பெப்ரவரி 24

**இந்தியத் தேர்தல்களில் இன்று காலைவரை அறிவிக்கப்பட்ட முடிவுகளின்படி ஆந்திரப்பிரதேசம், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரம், மைசூர், குஜராத், அஸ்ஸாம், ஹரியானு ஆகியஏழு ராஜ்யங்களில் ஆட்சி நடத்துவதற்கு அகில இந்திய காங்கிரஸ் பெரும்பான்மைப் பலம் பெற்றுருக்கிறது.**

தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் அரசாங்கம் அமைப்பதற்குத் த தகுதிபெற்றுள்ளது. இன்று பகல் வரை வெளிவந்த முடிவுகளின்படி திராவிட முன்னேற்றக்கழகம் 131 சட்டசபை ஸ்தானங்களைக் கைப்பற்றியுள்ளது. தமிழ்நாடு ராஜ்ய சட்ட சபையின் மொத்த ஸ்தானங்கள் 234 ஆகும்.

மற்றைய கட்சிகளைப் பொறுத்தமட்டில் ஒரிஸா ராஜ்யத்தில் சுதந்திராக்கட்சி கூடுதலான ஸ்தானங்களைப் பெற்று மற்றைய கட்சிகளைவிட முன்னணியில் சென்றுகொண்டிருப்பதாக இன்று பகல் வரை கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. ஒரிஸா சட்டசபையின் மொத்த ஸ்தானங்கள் 140 ஆகும்.

தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சிக்கு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால் ஆட்சியிலுள்ள பக்தவத்சலம் மந்திரிசபை தனது ராஜினுமாவை தமிழ்நாடு கவர்னரிடம் சமர்ப்பிக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

## காங்கிரஸ் ஆட்சி

இன்று காலைவரை வெளியான முடிவுகளின்படி ஏழு ராஜ்யங்களிலும் திரிபுராவிலும் காங்கிரஸ் கட்சி பெரும்பான்மைப் பலம் பெற்று ஆட்சி அமைப்பதற்குத் தகுதிபெற்றுள்ளபோதிலும் மேலும் சில ராஜ்யங்களையும் கைப்பற்றலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### மே. வங்காளம்

280 ஸ்தானங்களைக் கொண்ட மேற்கு வங்காளத்தில் காங்கிரஸ் கட்சி 124 ஸ்தானங்களைக் கைப்பற்றியிருப்பதால் ஆட்சி அமைப்பதற்குத் தகுதிபெற்றுள்ளது. இருந்தபோதிலும் மற்றையகட்சிகளைவிட அறுதிப் பெரும்பான்மையைக் காங்கிரஸ் இங்கு பெற்றுவிடவில்லை.

## குழப்பமான நிலைமை

பஞ்சாப், ராஜஸ்தான் சட்டசபைத் தொகுதிகளில் இன்று காலை வரை வெளியான முடிவுகளின்படி எந்தக் கட்சியுமே தனியாக ஆட்சி அமைப்பதற்குத் தகுதிபெறவில்லை. 184 சட்டசபைத் தொகுதிகளைக் கொண்ட ராஜஸ்தானில் இதுவரை 159 ஸ்தானங்களின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றில் காங்கிரஸ் 88 ஸ்தானங்களையும் சுதந்திரா 49 ஸ்தானங்களையும், ஜனசங் 22 ஸ்தானங்களையும் பெற்றுள்ளன. பஞ்சாப்பிலும் இதே நிலைமை நீடிப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## காங்கிரஸுடன் இணையும்?

280 சட்டசபை ஸ்தானங்களைக்கொண்ட மேற்கு வங்காளத்தில் ஒரு சில தொகுதிகளைவிட மற்றைய முடிவுகள் யாவும் அறிவிக்கப்பட்டுவிட்டன. காங்கிரஸ் கட்சி 124 ஸ்தானங்களைக் கைப்பற்றியுள்ளது. இருந்தபொழுதிலும் காங்கிரஸுடன் இணைந்து அரசாங்கம் அமைப்பதற்குச் சில கட்சிகள் முயற்சித்துவருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேற்கு வங்காள காங்கிரஸ் கட்சி தனது தோல்வியை ஒப்புக்கொண்டுள்ளது.

## முன்னணியில் சுதந்திரா

140 சட்டசபை ஸ்தானங்களைக்கொண்ட ஒரிஸாவில் இன்று காலைவரை வெளியான முடிவுகளின்படி காங்கிரஸ் கட்சி இரண்டாமிடத்தை வகித்துவருகிறது.

இதுவரை வெளியானமுடிவுகளின்படி சுதந்திரா 36 ஸ்தானங்களையும் காங்கிரஸ் 20 ஸ்தானங்களையும் கைப்பற்றியுள்ளன.

### வேறு சில ராஜ்யங்களில்

• மகாராஷ்டிராவில் மொத்தமாகவுள்ள 270 ஸ்தானங்களில் 245 தொகுதிகளுக்கான முடிவுகள் அறிவிக்கப்பட்டுவிட்டன. இவற்றில் காங்கிரஸ் 183 ஸ்தானங்களைக் கைப்பற்றியுள்ளது.

○ 168 ஸ்தானங்களைக் கொண்ட குஜராத் சட்டசபையில் இதுவரை வெளிவந்த 91 ஸ்தானங்களுக்கான முடிவுகளில் காங்கிரஸ் கூடுதலான தொகுதிகளில் வெற்றியீட்டி ஆட்சி அமைப்பதற்குத் தகுதிபெற்றுள்ளது. காங்கிரஸ் 63 ஸ்தானங்களையும், பிரஜா சோஷலிஸ்ட் 03 ஸ்தானங்களையும், ஜனசங் 01 ஸ்தானத்தையும், சுயேச்சை 05 ஸ்தானங்களையும்கைப்பற்றியுள்ளன.

○ ஆந்திரப் பிரதேசத்தில் 261 தொகுதிகளின் முடிவுகள் இன்று காலை அறிவிக்கப்பட்டன. இங்குள்ள சட்டசபையின் மொத்த ஸ்தானங்கள் 287 ஆகும். இதில் காங்கிரஸ் மிகவும் கூடுதலான தொகுதிகளைக் கைப்பற்றியுள்ளது. காங்கிரஸ்-165, சுதந்திரா-23, சுயேச்சை-59.

○ அஸாமில் இதுவரை வந்த முடிவுகளின்படி காங்கிரஸ் 65 ஸ்தானங்களை கைப்பற்றியுள்ளது. சர்வகட்சி மதத் தலைவர்கள் 8 ஸ்தானங்களையும், சுதந்திரா 1 ஸ்தானத்தையும், சுயேச்சை 14 ஸ்தானங்களையும் பெற்றுள்ளன.

## சென்னை நகரில்

சென்னைத் தொகுதிகளில் வெளிவந்த முடிவுகளில் 10 ஸ்தானங்களைத் தி. மு. கழகமும், சுதந்திரா 1 ஸ்தானத்தையும், சுயேச்சை 1 ஸ்தானத்தையும் பெற்றிருக்கின்றன.

## சுப்பிரமணியம் தோல்வி

தமிழ்நாடு லோகசபை ஸ்தானங்களுக்கான முதலாவது முடிவு வெளியிடப்பட்டது. கோபிசெட்டிபாளையம் தொகுதியில் தி. மு. க. அபேட்சகர் சுவாமிநாதன் மத்திய உணவுமந்திரி திரு. சுப்ரமணியத்தை 50,000க்கும் அதிகப்படியான வாக்குகளால் தோற்கடித்தார். உத்யோகபூர்வமான முடிவு அறிவிக்கப்படவில்லை.

திரு. சுப்பிரமணியத்துடன் மத்திய வர்த்தகமந்திரியான மனுபாய்ஷாவும், தோற்கடிக்கப்பட்டுள்ளார்.

## லோகசபைக்கு தெரிவு

சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சித் தலைவர், முஸ்லிம் லீக் தலைவர் ஆகியோருடன் உள்துறை மந்திரி திரு. வை. பி. சவான், வலதுசாரிக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. எஸ். ஏ. டாங்கே, திரு. ஹிரேன் முக்கர்ஜி, திருமதி விஜயலட்சுமி பண்டிட், திரு. காடில்கார், திரு. தினேஷ் சிங் ஆகியோரும் லோகசபைக் [இந்தியபார்லிமெண்ட்]குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## தமிழ்நாடு-கட்சிகள் நிலைமை

நேற்று பகல் வரை வெளியான முடிவுகளின்படி தமிழ்நாடு [ராஜ்ய சட்டசபை] கட்சிகள் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| தி. மு. க. | 131 |
| காங்கிரஸ் | 47 |
| சுதந்திரா | 19 |
| கம்யூனிஸ்ட் (மார்க்ஸிஸ) | 11 |
| கம்யூனிஸ்ட் | 02 |
| பிரஜா சோஷலிஸ்ட் | 04 |
| சம்யுக்த சோஷலிஸ்ட் | 02 |
| சுயேச்சை | 06 |
| முஸ்லிம் லீக் | 01 |
| வெளிவந்த ஸ்தானங்கள் | 223 |
| மொத்த ஸ்தானங்கள் | 234 |

## அந்தமான்தீவு அபேட்சகர்

அந்தமான் தீவுகளிலிருந்து லோகசபைக்கு காங்கிரஸ் அபேட்சகர் திரு. கே. ஆர். கணேஷ் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஒரு லோகசபை ஸ்தானம் மட்டுமே அந்தமான் தீவுகளில் ஒதுக்கப்பட்டிருந்தது.

## சகாய்க்கு கோரிக்கை

ராஜ்ய சட்டசபை, லோகசபை ஸ்தானங்களுக்குப் போட்டியிட்டு தோல்வியடைந்த பீஹார் முதன் மந்திரி திரு. கே. பி. சகாய் தமது ராஜினுமா கடிதத்தை பீஹார் கவர்னரிடம் சமர்ப்பித்த பொழுதிலும் பீஹாரில் மற்றைய ஏற்பாடுகள் செய்யப்படும் வரை தொடர்ந்து முதன் மந்திரியாக விருக்குமாறு பீஹார் கவர்னர் கேட்டுள்ளார்.

## வெற்றிபெற்ற முதன் மந்திரிகள்

ராஜ்யங்களின் பல முதன் மந்திரிகள் தோல்வியடைந்த பொழுதிலும் மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்திலுள்ளபகுதிகளின் 3முதன் மந்திரிகள் வெற்றி பெற்றுள்ளனர்.

### சாஸ்திரி மகன் வெற்றி

காலம் சென்ற இந்தியப் பிரதமர் திரு. லாலபகதூர் சாஸ்திரியின் மகன் ஹரி கிருஷ்ணு அலகபாத் தொகுதியிலிருந்து 17,000 - க்கும் அதிகமான வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளார்.

டேராடுன் தொகுதியில் போட்டியிட்ட மகாவீர் தியாகி தோல்வி அடைந்தார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட அபேட்சகர் ஒருவர் 40,000-க்கும் அதிகமானவாக்குகளால் வெற்றி பெற்றுள்ளார்.

## தண்ணீர்ப் பிரச்னை

நாரந்தனை, வியாழன்

வருடந்தோறும் தலைகாட்டும் குடிநீர்ப்பிரச்னை இம்முறையும் புங்குடுதீவு, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் தலைதூக்கியுள்ளது. நாரந்தனைப் பகுதியில் இருந்து வழமையிலும் பார்க்க கூடுதலான தண்ணீர் ஊர்காவற்றுறைக்கு அனுப்பப்படுகிறது.

## தடுப்பு மருந்து விநியோகம்

வல்வெட்டித்துறை, வியா.

அல்வாய் மேற்கு கிராம சேவையாளர் பகுதியில் சிரமதானமுறையில் ஏராளமான பிள்ளைகளுக்கு சுகாதாரப்பரிசோதகர் திரு. எஸ். சண்முகம்பிள்ளை தலைமையில் போலியோ தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டது.

## செய்தி திரைப்படங்கள்

குரும்பசிட்டி, வெள்ளி

இலங்கை அரசாங்க தகவல்பகுதியினரும், இலங்கையிலுள்ள மேற்கு ஜெர்மன் ஸ்தானிகராலய தகவல் பகுதியினரும் யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இவ்வாரத்திலிருந்து செய்தித் திரைப்படங்களைக் காண்பித்து வருகின்றனர். இதற்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாண மாவட்ட சனசமூகநிலையங்களின் சமாஜம் ஒழுங்கு செய்துள்ளது.

## இலவச படக்காட்சி

சுழிபுரம், வெள்ளி

வடலியடைப்பு சங்கானை மேற்கு சன சமூகமுன்றலில் ஜெர்மன் தகவல்பகுதியினர் ஓர் இலவச படக் காட்சியைக் காண்பித்தனர். பலர் இக் காட்சியை கண்டு களித்தனர்.

• • •

நீர்வேலி, வெள்ளி

நீர்வேலி ஸ்ரீவிநாயக சனசமூக நிலையத்தில் ஜேர்மன் தகவற் பகுதியினரால் கைத்தொழில் விளையாட்டு, மிருகக் காட்சிகள் அடங்கிய விஷேட இலவசபடக்காட்சி காண்பிக்கப்பட்டது. அனேக மக்கள் கண்டு களித்தனர்.

## நியமனத்தில் அதிருப்தி

புன்னாலைக்கட்டுவன், வெள்ளி

அண்மையில் நடைபெற்ற கல்லூரி உபஅதிபர் நியமனங்களால் ஏற்பட்ட அதிருப்திகாரணமாக வலி-கிழக்கு ஆசிரியர்சங்கத்தலைவர் வடமாகாண ஆசிரியர் சங்கத்துக்குச் சில விளுக்களை எழுப்பி இது விடயம்பற்றிச்சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைநடத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

## புதிய பொலீஸ் உத்தியோகத்தர்கள்

கொழும்பு, வெள்ளி

சி. ஐ. டி. பொலிஸ் சுப்ரின்டட் திரு. ஆனு செனிவரத்னவும், தலைமைக்காரியாலயப் பொலிஸ் சுப்ரின்டன்ட் திரு. பி. பி. பெரப்பிட்டியாவும் அடுத்தமாதம் உதவிபொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல்களாகப்பதவி ஏற்பார்களெனத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாநகரசபையில் சுகாதார பரிசோதகர் பற்றுக்குறை

## மந்திரிக்கு வைத்திய அதிகாரி அறிவிப்பு

யாழ்ப்பாணம், சனி

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் யாழ்ப்பாண மாநகர சபையின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்திருந்தார். மாநகரசபை ஆணையாளர்கள் திருவாளர்கள் எஸ். நடேசன், எஸ். சி. மாணிக்கவாசகர், ஹட்சன் செல்வராசா ஆகியோருடன் விசேஷ கூட்டமொன்றில் கலந்துகொண்டபோது மாநகரசபை நிர்வாகம், புதிய 'பட்ஜட்', புதியமார்க்கட் ஆகியனவற்றிற்கான இடங்களைப் பார்வையிட்டார்.

மாநகரசபைப் பகுதிக்கு 10 பொது மருத்துவத் தாதிகள் தேவை எனவும், ஆனால் ஒருமருத்துவத் தாதியும் கூட இங்கு இன்னமும் நியமிக்கப்படவில்லையெனவும், 10 சுகாதாரப் பரிசோதகர்கள் வேண்டியிருக்கும் வேளையில் 4 சுகாதாரப் பரிசோதகர்களுடன் மிகவும் கஷ்டமுறவேண்டியிருப்பதாகவும் இதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும், யாழ். மாநகரசபை வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். இராஜசூரியர், அமைச்சர் திரு. எம். திருச்செல்வத்திடம் கேட்டுக்கொண்டார்.

அமைச்சர் திருச்செல்வம் மாநகரசபை ஆணையாளர்களுடன், பொதுஜன நூலகம், பகிரங்க வேலைப்பகுதி, சுகாதாரப் பகுதி, மின்சாரப் பகுதி, மாநகர சபை ஆயுர்வேத வைத்தியசாலை, தண்ணீர் விநியோகப் பகுதி ஆகியன உட்பட யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகங்களையும் சென்று பார்வையிட்டார். [ந. நி.]

---

## உப உணவு விநியோகம்

கோண்டாவில், வியாழன்

கடந்த வாரத்தில் இங்குள்ள கூட்டுறவுச் சங்கம் மூலம் மக்களுக்கு உப உணவுப்பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டன. முக்கியமாக 2 அவுன்ஸ் மல்லியும், 3 அவுன்ஸ் மிளகாயும் இச்சங்கம் மூலம் விநியோகம் செய்யப்பட்டன.

## கோயில் பொருளை களவாடியவருக்கு

### 7 மாதம் சிறை

வல்வெட்டித்துறை, வெள்ளி

புலோலி தெற்கு மந்திகை அம்மன் கோவிலில் 215 ரூபா பெறுமதியான பொருட்களை சென்ற தை மாதம் 19-ந்திகதி களவாடியதாக எழுதுமட்டுவாளைச் சேர்ந்த முருகர் பொன்னுத்துரை என்பவர் மீது பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மாஜிஸ்திரேட் திரு. ஆர். இளையபெருமா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது எதிரியானவர்தான் களவாடப்பட்ட பொருட்களை வைத்திருந்ததாகவும் அதற்குத் தான் குற்றவாளியெனக்கூறவே மாஜிஸ்திரேட் எதிரியை குற்றவாளியாகக்கண்டு 7 மாதச் சிறைத் தண்டனையும் இரண்டு வருட பொலிஸ் பாதுகாப்பில் செல்லுமாறும், மாதத்தின் முதல் போயா நாளுக்கும் மூன்றும் போயா நாளுக்கும் சாவகச்சேரி பொலிசில் சமூகம் கொடுக்கும்படியும் உத்தரவிட்டார்.

---

## பாதைகளின் சீர்கேடு

கோண்டாவில், வியாழன்

கோண்டாவில் இருபாலை வீதி, ஸ்டேசன் வீதிகள் மிகவும் சீர்கேடான முறையில் உள்ளன. மழை காலங்களில் பாதசாரிகள் தமது உடைகளை 'அடகு' வைத்தே இப்பாதையால் செல்லவேண்டியிருக்கின்றனர். இவ்வீதியில் உள்ள பள்ளங்களில் நீர் தேங்கி நின்று வாகனங்கள், இவ்வீதியால் செல்லும்பொழுது பாதசாரிகளின் உடைகளை பதம் பார்த்துவிடுகின்றது.

# 'ஆரம்பபிரிவை மூடவேண்டாம்'

உடுவில், வெள்ளி

'சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் ஆரம்ப பிரிவை படிப்படியாகக் கல்விப் பகுதியினர் மூடிவருவது வருந்தத்தக்கதொன்றாகும். இவ்வருடம் 6-ம் வகுப்பில் இருந்து ஆரம்பமாகும் வகுப்புக்கள் அடுத்த ஆண்டு முதல் 7-ம் வகுப்பிலிருந்து ஆரம்பமாகுமெனத் தெரியவந்துள்ளது. தமிழ் பாடசாலைகளில் விஞ்ஞானம் கற்பிக்கப்படாததால், அப்பாடசாலைகளில் இருந்து இங்கு வந்துசேரும் பிள்ளைகளுக்கு 7-ம் வகுப்பிலிருந்து விஞ்ஞானம் கற்பது மிகுந்த சிரமத்தைத்தரும்'' என்று கோரும் தீர்மானம் ஒன்றை கந்தரோடை சனசமூக நிலையமும், இந்துவாலிபர் முன்னணியும் நிறைவேற்றி அரசாங்கத்துக்கு அனுப்பியுள்ளன. இதன் பிரதிகள் யாழ்ப்பாண மாவட்ட வித்தியாதிபதி, ஸ்கந்தவரோதய கல்லூரி அதிபர், உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

---

## சென்ற வருடம் 175 பேர் கைது

யாழ்ப்பாணம், சனி

கடந்த வருடத்தில் இந்தியாவிலிருந்து வடமாகாணத்திற்கு சட்டவிரோதமாகக் குடியேறியவருள் 175 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்களுள் 100க்கும் மேற்பட்டவர்கள் இந்தியமுஸ்லிம்கள் எனத் தெரியவந்துள்ளது. [ந. நி.]

---

## பிரிவுபசாரம்

அராலி, சனி

வட்டுக்கோட்டைகிராம ஆஸ்பத்திரியில் உதவி வைத்தியராகவும் ஆஸ்பத்திரிப் பொறுப்பாளராகவும் கடமையாற்றி கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்குமாற்றலாகிச் செல்லும் திரு. எஸ். ஜெகதீசனுக்கு பிரிவுபசாரமொன்று வட்டுக்கோட்டை அராலி வாசிகளால் நடாத்தப்பட்டது. திரு. ஏ. ஸி. சுந்தரம்பிள்ளை இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். பலர்பாராட்டிப்பேசினர்.

# கந்தரோடையில் அமெரிக்க நிபுணர்

உடுவில், வெள்ளி

கந்தரோடை புதைபொருள் ஆராய்ச்சிகள் செய்யவும், கண்டுபிடிப்புகள் நடத்தவும் திறமை வாய்ந்த புதைபொருள் ஆராய்ச்சி பெண் நிபுணர் ஒருவர் அமெரிக்காவிலிருந்து இங்கு வந்துள்ளார். அமெரிக்காவில் உள்ள பென்சில்வேனியா என்ற இடத்திலிருந்து வந்துள்ள இப் புதைபொருளாராய்ச்சி நிபுணர் சுமார் மூன்றுமாத காலம் இங்கு தங்கியிருந்து ஆராய்ச்சிகள் நடத்துவார் எனத்தெரியவருகிறது. இவர் நேற்று கந்தரோடை புதைபொருள் ஆராய்ச்சி நிலையத்தை நேரில் சென்று பார்வையிட்டார்.

---

## மொண்டேகுவின் புதிய உத்தரவு

மாவிட்டபுரம், வியா.

உணவு உற்பத்தி இயக்கத்துக்கு ஆதரவு அளிக்க பொதுமராமத்துப் பகுதியும் முன்வந்துள்ளது. பொது மராமத்து மந்திரி மேஜர் மொண்டேகு ஜெயவிக்கிரம பிறப்பித்துள்ள புதிய உத்தரவுகளின்படி கமச்செய்கை வட்டாரங்களுக் கூடாக செல்லும்தெருக்கள் திருத்தியமைக்கப்படவிருக்கின்றன. புதிய தெருக்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

பொதுமராமத்து இலாகா டைரக்டர் நாட்டில் உள்ள சகல பிரிவுக்காரியாதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்திருக்கும் சுற்றுநிருபத்தில் திருத்தியமைக்கப்பட வேண்டிய பாதைகள்பற்றியும், புதிதாக அமைக்கப்படவேண்டிய பாதைகள்பற்றியும்விபரங்கள் தருமாறு கேட்டுள்ளார்.

நாரந்தனை, வியாழன்

''பதுக்கல்காரரிடம் இருந்தும், தனிப்பட்ட, கூட்டுறவுக்கடைகளிலிருந்தும் எங்களைப் பாதுகாருங்கள். எங்களுக்குச் சேரவேண்டிய உபஉணவுப் பொருட்களைத் தருவதற்கு மறுக்கிறார்கள். இதற்குத் தக்க நடவடிக்கையை எடுக்கும்படி, ஏழை மக்கள் கேட்கிறோம்'' இவ்வாறு ஊர்காவற்றுறை பொலிஸ்நிலைய அதிபருக்கு காரைநகர் மக்கள் மகஜர் அனுப்பிவைத்துள்ளனர்.

---

## பல்பிரிவு இயங்குவதில் தாமதம்

சங்கானை, செவ்வாய்

சங்கானை அரசினர் ஆஸ்பத்திரியில் இவ்வருடம் தை மாதமிருந்து ஆரம்பிக்கப்படவிருந்த பல்வைத்தியப் பிரிவு இயங்குவதற்கு அதற்கென வரவழைக்கப்பட்ட விசேட கதிரையின் ஒரு பகுதி பழுதடைந்தநிலையில் இருந்ததால் அப்பகுதி இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை. இதைத் தொடர்ந்து ஆஸ்பத்திரி பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். நடனச்சந்திரன் மேலிடத்தாருடன் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து சௌக்கியப்பகுதியினர் அவ் விசேட கதிரையைப் பழுதுபார்ப்பதற்காகக் கொழும்பிற்கு எடுத்துச் சென்றுள்ளனராம்.

---

சுழிபுரம், வெள்ளி

பொன்னாலை வரதராசப் பெருமாள் கோவில் இலட்சார்ச்சனை நேற்றுடன்பூர்த்தியடைந்தது,

---




## கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம்

### லங்கா சாரங்களின் புது விலைகள்

கீழ்க்காணும் உள்ளூர்ச் சாரங்கள் போதுமான அளவில், அந்தந்த ரகங்களுக்கு நேரே குறிப்பிட்டுள்ள விலைக்கு எல்லா கூ. மொ. வி. ஸ்தாபனக் கடைகளிலும் தங்கு தடையின்றிக் கிடைக்கும்.

**1. லங்கா சாரம் முதலாம் ரகம்** (29"×4¼" யார்)

| | சில்லறை விலை |
|---|---|
| 9%, 22% நிறம் | ரூ. 8-00 |
| 9%, 22% நிறம். விசேஷமாகத் தயாரித்து செலபேன் பைகளில் அடைக்கப்பட்டவை | ரூ. 8-25 |
| சாயமூட்டி விசேஷமாகத் தயாரித்து செலபேன் பைகளில் அடைக்கப்பட்டவை | ரூ. 8-50 |
| 45% நிறம் | ரூ. 8-50 |
| 100% நிறம் | ரூ: 8-50 |
| 2- லங்கா சாரங்கள் முதலாம் ரகம் (50") | ரூ. 6-55 |

**3. லங்கா சாரங்கள் 60×40** (29"×4¼" யார்)

| | |
|---|---|
| 9%—12% நிறம் | ரூ. 7-35 |
| விசேஷமாகத் தயாரித்து, செலபேன் பைகளில் அடைக்கப்பட்டவை | ரூ. 7-35 |
| சாயமூட்டி, விசேஷமாகத் தயாரித்து, செலபேன் பைகளில் அடைக்கப்பட்டவை | ரூ. 7-60 |

**4. லங்கா சாரங்கள் 40×40** (29"×4¼" யார்)

| | |
|---|---|
| 9%—12% நிறம் | ரூ. 6-65 |
| 9%—12% நிறம் விசேஷமாகத் தயாரித்து, செலபேன் பைகளில் அடைக்கப்பட்டவை | ரூ. 6-95 |
| சாயமூட்டி, விசேஷமாகத் தயாரித்து, செலபேன் பைகளில் அடைக்கப்பட்ட வை. | ரூ. 7-25 |

மொத்தமாகக் கொள்வனவு செய்வோருக்கு வியாபாரிகளுக்குரிய தள்ளுபடி கொடுக்கப்படும்

விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

முகாமையாளர்,

**கூ. மொ. வி. ஸ்தாபனம்,**

**ஜவுளி விநியோகம்,**

82, ஜாவத்தை ரோட்டு, கொழும்பு 5



வர்த்தகக் குறியையும் தயாரிப்பு உரிமைகளையும் அத்துமீறுவோர்களுக்கு

## ஓர் எச்சரிக்கை

ராதா பொபியூமரி & ராதா புறடக்ஸ்

(Radha Perfumery & Radha Products)

ஸ்தாபனத்தாரால்

தயாரிக்கப்பட்டுவரும் பத்மினி ஜவ்வாஜி பத்தி என்ற வர்த்தகக் குறியின்கீழ் தயாரிக்கும் பிரசித்திபெற்ற பத்மினி ஜவ்வாஜி பத்தி ராதா பொபியூமரி அன் ராதாபுறடக்ஸ் ஸ்தாபனத்தாரால் தயாரித்து அவர்களின் ஏகவிநியோகஸ்தர்களாகிய எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனியாரால் விற்பனை செய்யப்படுகிறது. அமோகமான விற்பனையைக் கண்டு சில போலிவியாபாரிகள்போலிபத்திகளை தயாரித்து

**பத்மினி ஜவ்வாஜி டிசைன் லேபல்களை ஒட்டி**

விற்பனை செய்து வருவது எங்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தப்போலிப் பத்திகளுக்கு மேல் ஒட்டப்பட்டிருக்கும் லேபல்கள் அசல் பத்மினி ஜவ்வாஜி பத்தி டிசைன்களைப் போலவே காணப்படுகிறது. பத்மினி ஜவ்வாஜி பத்தி பாவனையாளர்களை, தயாரிப்பாளர்களும் விற்பனையாளர்களும் ஏமாற்றுகிறார்கள். இவை சட்டவிரோதமாக எமது வர்த்தகக் குறியையும், தயாரிப்பு உரிமையையும் உபயோகிக்கும் போலித் தயாரிப்பாளரையும், விற்பனையாளர்களையும் இவ்வித பாரதூரமான - சட்டவிரோதமான செயலில் மேற்கொண்டும் ஈடுபடாமல் இருக்கும்படி இத்தால் எச்சரிக்கிறோம்.

பொதுமக்கள் பத்மினி ஜவ்வாஜிபத்தி வாங்கும்போது அசல் பத்மினி ஜவ்வாஜி பத்திதானா எனக் கவனித்து வாங்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

## எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

ராதா பொபியூமரி அன் ராதா புறடக்ஸ் ஸ்தாபனத்தாரின் ஏகவிநியோகஸ்தர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காணி

சாவகச்சேரி யி லி ரு ந் து 1 1/2 மைலுள் கச்சாய் ரோட்டில் பரப்பு ரூபா 600 கேள்வியில் 35 பரப்புக் காணி விற்பனைக் குண்டு. விரும்பியோர் பகுதியாகவும் வாங்கலாம். க. தம்பு, மீசாலை கிழக்கு, மீசாலை. 1556

### வாடகைக்கு

கடை

காங்கேசன்துறை வீதியில் சுன்னுகம் யூனியனுக்கு முன்பாக உள்ள கடைக் கட்டிடம் வாடகைக்கு விடப்படும். மின்சார வசதியுண்டு. விபரங்கட்கு S. அல்பிறெட், 'சீலஇல்லம்', மல்லாகம். 1564

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணனந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

மாதகல் லோப்புப்பிள்ளை அமிர்தநாத பிள்ளை யோசேப் ஆசிரியரின் புதல்வரும் காலஞ்சென்ற திரு. லோப்புப்பிள்ளை அமிர்நாத பிள்ளை [சின்னத்துரை]யின் பேரனும், வண. எல். ஏ. சிங்கராயர் ஓ. எம். ஐ. சுவாமியாரினதும், ஏ. எல். இராசரத்தினம், ஏ. ஞானப்பிரகாசம், எல். ஏ. அருளானந்தம் ஆகியோரின் பெருமகனும், வண. எஸ். ஏ. மைக்கல் ஓ. எம். ஐ. சுவாமியாரினதும், திருமதி லில்லி ஆரோக்கியசாமியின் மருமகனும், சங். சகோதரர் ஒஸ்வல்டின் சகோதரருமான சிறில் ரஞ்சித் டியூலிப்குமார் காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மாதகல் சந்தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். 2349

## சமமான முடிவு

குரும்பசிட்டி, வெள்ளி

சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரிக்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் ஆட்டம் நேரம் போதாமையால் எந்தக் கல்லூரிக்கும் வெற்றி தோல்வியின்றி முடிந்தது. இப்போட்டி தெல்லிப்பழை யூனியன்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி வீரர்கள் தமது எல்லா விக்கெட்டுகளையும் இழந்த நிலையில் 259 ஓட்டங்களை முதல் இன்னிங்ஸில் கைப்பற்றிக்கொண்டனர். இதையடுத்து ஸ்கந்தவரோதயா வீரர்கள் சகல விக்கெட்டுக்கள் நஷ்டத்திற்கும் 269ஓட்டங்களை தமது முதல் இன்னிங்ஸில் பெற்றுக் கொண்டனர். இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த யூனியன் கல்லூரியினர் 155 ஓட்டங்களை அடித்து சகல விக்கெட்டுகளையும் இழந்தனர். தொடர்ந்து ஸ்கந்தா வீரர் விளையாடிநேரம் போதாமையால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30 6-30. 9-45
போயாதினங்களில் 4 காட்சிகள்
ஜெமினி - சாவித்திரி
நடித்த
கொஞ்சும் சலங்கை

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30. 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
சிவாஜி - தேவிகா
நடித்த
ஆண்டவன் கட்டளை

MANOHARA
JAFFNA
Daily at 4-45, 7-00, 9-45
BRETT HALSEY
as Secret Agent 077
in
Espionage in Lisbon

REGAL - JAFFNA
NOW SHOWING
M.G.M.
GET YOURSELF
A GOLLEGE GIRL
Color

## துணுக்காய் செய்திக் கடிதம்

— நமது நிருபர் கு. சிவஞானசண்முகம் —

துணுக்காய் கிராமசபையுடன் இணைக்கப்பட்டிருந்த வவுனிக்குளம் முதலாம், இரண்டாம் பகுதிகள்வேருக்கப்பட்டு புதியகிராமசபை ஒன்று நிறுவப்படவிருக்கிறது. இச்சபை மல்லாவி, அணிஞ்சியன்குளம், வவுனிக்குளம் 1, 2, 3, 4, 5, 7ம் யூனிற்களையும் உள்ளடக்கியதாக இருக்கும் என்றுதெரியவருகிறது.

### துணி எங்கே

துணுக்காய்ப்பிரிவு கூட்டுறவு சங்கங்களின் சமாசத்திற்கு கடந்தவாரம் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஜப்பான்காற்சட்டைத்துணி இதுவரை எந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பங்கீடு செய்யப்படவில்லை என்றும் இத்துணி மர்மமாக மறைந்திருக்கிறதென்றும் கூறப்படுகிறது.

### நியமனப்பத்திரம

புலோப்பளைக் கிராமசபையின் புதிய தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் இம்மாதம் 18-ம் திகதி கிராமசபை அலுவலகத்தில் தேர்தல் அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### திறப்புவிழா

துணுக்காய் கிராம முன்னேற்றச்சங்கத்தின் புதிய கட்டிடத்தை அண்மையில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன்அபயசேகரா திறந்துவைத்தார். இச்சங்க விளையாட்டுமைதானத்தை யாழ். மாவட்டக் காணி அதிபர் திரு. செ. சிவஞானம் திறந்துவைத்தார்.

### அசையாமணி

சாலம்பன் பிள்ளையார் கோவிலுக்கு அப்பகுதிமக்களால் அன்பளிக்கப்பட்ட அசையாமணி அண்மையில் ஏற்றப்பட்டு முதன்முதலாக வவனிக்குள நீர்ப்பாசனப் பொறியியலாளர்திரு. எஸ். வேலுப்பிள்ளையினுல் அடித்து வைக்கப்பட்டது.

### நத்தைவேகம

இலங்கைத் தபாற்பகுதியினர்தந்திச் சேவையில் மற்றுமொரு சாதனையை நிலை நாட்டியுள்ளனர். மல்லாகம் என்ற இடத்திலிருந்து மல்லாவியில் உள்ள திரு. த. இராசையா என்பவருக்கு அவரது சகோதரர் ஜயாத்துரை அனுப்பிய நூற்றுஅறுபதுரூபா தந்திக்காசுக் கட்டளை அனுப்பிய நாலாவது நாளில்தான் கிடைத்தது. மல்லாகத்திலிருந்து மல்லாவிக்குஒரு நாளிலேயே சென்று திரும்பிவரமுடியும். ஆனுல் தந்தி இத்தூரத்தை வந்துசேர நாலு நாட்கள் எடுத்திருக்கிறது.

### மகோற்சவம

மாவிட்டபுரம், வெள்ளி

கீரிமலைச் சிவன் கோவிலின்வருடாந்தமகோற்சவம் இன்று ஆரம்பித்தது. பதினைந்து தினங்கள் நடைபெறும் இந்த ஆலயத்தின் உற்சவம் மகா சிவராத்திரி தீர்த்தத்துடன் பூர்த்தி அடையும்.

### நான்குகால் கோழிக்குஞ்சு

சங்கானை, வெள்ளி

சங்கானை நிற்சாமம்என்னுமிடத்தில் 4கால்களுடன்ஒரு கோழிக்குஞ்சு பொரித்துள்ளது. இதில் முன்புறமாக உள்ள இரு கால்களும்இயங்குகின்றன. பின் இரு கால்களும் சிறிதாகவும் பின் நோக்கி வளைந்தும் இயங்க முடியாத நிலையில் அமைந்துள்ளன.

## "இசை இறைவனது கொடை அது அனைவருக்கும்கிடைப்பதுஅரிது"

### அரங்கேற்று விழாவில் கலையரசு

யாழ்ப்பாணம், சனி

"சங்கீதம் என்ருல் இன்பமளிக்கும் ஒரு கலை என்பது பொருள். அதனுல் பாடுபவர் மட்டுமின்றி கேட்பவர்களும் அதிக நன்மை அடைகின்ருர்கள். மனிதனது அன்ருட வாழ்க்கையில் சங்கீதம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. மருந்துகளினுலும்கூட மாற்றமுடியாதபல நோய்களை இச்சங்கீதத்தினுல் மாற்றமுடியும். அதிக வேலைகளைச்செய்து மனிதன் களைப்படைந்து, அவனது நரம்புகள் இளைத்து இருக்கும்போது சங்கீதத்தைக் கேட்பதனுல் அவனது நரம்புகள் குளிர்ச்சியடைகின்றன. இதனுல் மனிதனதுசுக வாழ்வுக்கு சங்கீதம் மிக அவசியமாகின்றது. இந்தச் சங்கீதத்துக்கான அருமையான சாரீரம்அனைவருக்கும் கிடைப்பது அரிது. இது இறைவனது ஒரு கொடையாகும். செல்வி ஈஸ்வரி தேவியிடம் சங்கீத ஞானமும் அருமையான சாரீரமும் இருப்பதை அவரது சங்கீதக் கச்சேரியிலிருந்தே அறிந்து கொள்ளக் கூடியதாக விருந்தது."

மேற்கண்டவாறு நேற்று இரவு யாழ். மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்ற சங்கீதபூஷணம் செல்வி ஈஸ்வரிதேவி குமாரசிங்கத்தின் இசை அரங்கேற்றத்தில் கலையரசு சொர்ணலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.

வடமாகாண வித்தியாதிபதி திருமதி ஆர். நவரத்தினம் இவ்வைபவத்துக்கு தலைமை தாங்கினுர். முன்னுள் மாவட்டநீதிபதி திரு. எஸ். தனபாலசிங்கம் டாக்டர் கே. சிவஞானரத்தினம், குமாரசாமிப் புலவர் ஆகியோரும் ஆசியுரை வழங்கினுர்கள். [ந. நி]

## ஆண்டவனை அன்போடு வழிபட வேண்டும்

நாவலப்பிட்டி, பெப்.

"நமக்கு ஆபத்து வந்த வேளையில் நம்மையுமறியாது நம் வாய் ஆண்டவனது துணையை வேண்டுதல் செய்வது தவருகும். நம்மையுமறியாமல் செய்யும் இச் செயல் எம்மை விட்டு நீங்க வேண்டும். எம் மனதுள் நின்று எம்மை ஆட்டி வைக்கும் உயிர்க்குயிரான உருவைக் கண்டால் நாம்எளிதில்ஆண்டவனைக் கண்டவர்களாவோம். ஆண்டவனை நாம் உண்மை அன்போடு பயபக்தியாக வழிபட வேண்டும்.

இவ்வாறு நாவலப்பிட்டி ஸ்ரீமுத்துமாரியம்மன் மண்டலாபிஷேக விழாவில் கலந்து கொண்டு சமய சொற்பொழிவாற்றிய திருப்பூங்குடி திரு. வி. க. ஆறுமுகம் குறிப்பிட்டார்.

## பொலிசாரின் புதுவருட விழா

மாவிட்டபுரம், வெள்ளி

புதுவருட தினத்தை முன்னிட்டு சுன்னுகம் பொலிஸ் பகுதி மக்கள் பெரும் விழாவை நடத்த இருக்கிருர்கள். இவ்விழா இராமநாதன் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும். இவ்விழாவை முன்னிட்டு வண்டிச்சவாரி, சைக்கிளோட்டம், கைப்பந்தாட்டம், வாணவேடிக்கை உட்பட பன்னிரண்டு விளையாட்டுக்கள் இடம்பெறும். இதற்கான ஏற்பாடுகளை சுன்னுகம் பொலிஸ் பகுதியினரும், அப்பிரிவு கிராமசேவையாளர்களும் செய்துவருகின்றனர்.

## ஆலயப்பிரவேசம்: புதிய நடவடிக்கை

மாவிட்டபுரம், வியா.

சிறுபான்மைத்தமிழர் ஐக்கியமுன்னணியினதும் சைவசமரச சங்கத்தினதும் தூது கோஷ்டியொன்று இந்து மாமன்றத்தலைவரும் இளைப்பாறிய நீதியரசருமான திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசாவைப் பேட்டிகாண முயற்சிகள் மேற்கொண்டுள்ளது.

ஆலயப்பிரவேசப் பிரச்னையைச் சுமுகமான முறையில் தீர்ப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டுஇருக்கின்றன.

## உணவு உற்பத்தி பிரசாரகூட்டங்கள்

### வலி.வடக்கில் நடக்கும்

மாவிட்டபுரம், வியாழன்

உணவு உற்பத்தி இயக்கப் பிரசாரக்கூட்டங்கள் வலி. வடக்கில் நடக்கவிருக்கின்றன. வலி-வடக்கு காரியாதிகாரி பிரிவில் விவசாய உற்பத்தி இயக்கத்தில் கோடைக்கால உபஉணவுப் பொருள் பயிரிடும்படி இப்பகுதி விவசாயிகளைத் தூண்டுவதே இக்கூட்டங்களின் நோக்கமாகும்.

வலி-வடக்கில் உள்ள சில கிராமங்களில் புகையிலைச் செய்கை முடிந்ததும் நிலங்கள் அடுத்த ஆறுமாதத்துக்கு உபயோகப்படுத்தப்படுவதில்லை. இக்காலத்தில் உபஉணவுப்பயிர்களை உற்பத்தி செய்யும்படி இந்த விவசாயிகளைத் தூண்டும் வகையில் கிராமங்கள் தோறும் இப்பிரசாரக் கூட்டங்கள் நடத்தப்படவிருக்கின்றன. இக்கூட்டங்களில் வலி. வடக்கு காரியாதிகாரி, மேலதிக அரசாங்க அதிபர் ஆகியோர் கலந்து கொள்ளுவர்.

### சங்கத்துக்கு எதிராக புகார்

மாவிட்டபுரம், வியாழன்

மல்லாகம் கூட்டுறவுச் சங்கத்துக்கு எதிராக கூட்டுறவு ஆணையாளருக்கு புகார்செய்யப்பட்டிருக்கிறது. இச்சங்கத்தில் நடைபெறும் ஊழல்கள் மோசடிகள் சம்பந்தமாக இன்று நடத்தப்படவிருந்த விசாரணை அடுத்த மாதத்துக்குபின்போடப்பட்டுள்ளது.

### இவர்களை பொலிசார் தேடுகின்றனர்

யாழ்ப்பாணம், வெள்ளி

கொழும்புத் துறையைச் சேர்ந்த நடராஜா என்பவரது வீட்டுக்கு நள்ளிரவு தீவைக்கப் பட்டதாகவும்' இதனுல் அவரது வீட்டிலிருந்த சுமார் 4000 ரூபா பெறுமதியான பொருட்களும், அவரது வீடும் தீக்கிரையாகியதாகவும் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் நடராஜாவின் மைத்துனகளிருவரை பொலிசார் தேடிவருகின்றனர். [ந. நி.]

## அந்தோனியார் திருவிழா

மன்னுர், வெள்ளி

யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள பாலைதீவு அர்ச். அந்தோனியார் திருவிழா ஆரம்பமாகியுள்ளது. இத்திருவிழாவையொட்டி மன்னுர் பள்ளிமுனையிலிருந்தும், யாழ்ப்பாணம் குருநகர் துறைமுகத்திலிருந்தும் ஏராளமான மோட்டார் படகுகள் ஆலயத்துக்குச் செல்லுகின்றன. நாளைசனிக்கிழமை வேஸ்பர் ஆராதனையும் ஞாயிற்றுக்கிழமை பாடற்பூசை, அர்ச் அந்தோனியார் சுரூப சுற்றுப்பிரகாரத்துடனும் திருவிழா முடிவடையும்.

நவா
கொம்பனித்தெரு
இங்ஸ்லி பிளாஸா வெலிங்டன்
கொழும்பு வெள்ளவத்தை யாழ்ப்பாணம்
3வது வெற்றி வாரம்!
விஜயா ஸ்ரீ கிருஷ்ணு விஜிதா
மட்டக்களப்பு திருமலை ஹட்டன்
அன்பு பாசத்தால் பிணைக்கப்பட்ட ஒரு டாக்டர்!
கால் ஊனம் ஆனதால் தாழ்வு மனப்பான்மை
கொண்டு தத்தளிக்கும் அவர் தங்கை!!
அருமைக் கணவன்மீது சந்தேகங் கொண்ட
அவர் மனைவி!! இவர்கள் மூவரின் கதை-
எஸ். எஸ். ராஜேந்திரன்
விஜயகுமாரி, எஸ். வி. சுப்பையா
எல். விஜயலக்ஷ்மி, நாகேஷ், மணிமாலா
முதலியோர் நடிக்கும்
காக்கும் கரங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி

# செய்திக் கடிதம்

— நமது நிருபர் இ. பிரேமகாந்தன் —

கண்டியில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட கண்டி கலைக்கழகத்தின் முதலாவது நாடகம் மார்ச் மாதம் 3-ந் திகதி கண்டி செஞ்சிலுவைச் சங்கத்தில் நடைபெறும்.

O

**மகா சிவராத்திரி**

மகாசிவராத்திரியை முன்னிட்டு கண்டி செல்வவிநாயகர் கோவிலில் விசேஷ பூசையும் கதாப்பிரசங்கங்களும் நடைபெறும். ஸ்ரீ ல ஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரானின் கதாப்பிரசங்கமும் இடம்பெறும்.

O

**பால முரளி கிருஷ்ணு**

இம்மாதம் இலங்கைவரும் பிரபல பாடகர் திரு. பால முரளி கிருஷ்ணு கண்டியிலும் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்வார். பல்கலைக்கழக இந்துக்கோவில் கட்டிட நிதிக்காக நடைபெறும் கச்சேரியில் அவர் கலந்து கொள்வார்.

O

கண்டியில் கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றை நிறுவ அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. 1968-ம் ஆண்டு இது திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

O

**நடவடிக்கை**

பறிக்கப்பட்ட துப்பாக்கிகளை மீண்டும் உரிமையாளர்களுக்கு வழங்கவேண்டும் என்று திரு. வி. அண்ணாமலை எம். பி. கோரியதற்கு இணங்கி அதற்கான நடவடிக்கைகளை மாவட்ட அதிகாரி மேற்கொண்டுள்ளார்.

கண்டிக்கும் உருவலைக்கும் இடையில் நடைபெற்றுவரும் பஸ் போக்குவரத்து மேலும் விஸ்தரிக்கப்பட இருக்கின்றது.

O

**எழுத்தாளர் சங்க தலைவர்**

மலைநாட்டு எழுத்தாளர் சங்கக்கூட்டம் அண்மையில் அட்டனில் கூடியபோது புதிய உத்தியோகத்தர்கள் தெரிவு நடைபெற்றது. திரு. ரா. மு. நாகலிங்கம் தலைவராகத்தெரிவு செய்யப்பட்டார்.

O

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் மாசிமக மகோற்சவம் வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவுடன் முடிவடைந்தது. திருவிழாவை முன்னிட்டு இரவு வேளைகளில் விசேஷ பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரானின் கதாப்பிரசங்கம் ஒவ்வொரு நாளும் தொடர்ந்து நடைபெற்றது.

O

**விபத்து**

கண்டியை நோக்கி வந்துகொண்டிருந்த கார் ஒன்று கடுகண்ணாவைப் பாறைக்கு அருகாமையில் இருநூறு அடி பள்ளத்தில் விழுந்தது. காரில் இருந்த ஒரு பெண் ஸ்தலத்திலே மாண்டார். மற்றும் நான்கு பேர் கண்டி நர்ஸிங்ஹோமில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று கொழும்பில்இழுக்கப்பட்ட 130-வது தேசிய சுவீப் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:-

**முதல் பரிசு:**

30 P 0954 - ரூ.1 ,00,000

**இரண்டாவது பரிசு:**

41 M 0430 - ரூ. 40,000

**மூன்ருவது பரிசு**

35 X 0739 - ரூ.10,000

தலா ரூ. 788-60 சதம் பரிசு பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 34 K 0171 | 37 Q 0978 |
| 10 J 0066 | 37 D 0073 |
| 25 R 0362 | 20 G 0564 |
| 18 N 0402 | 12 Q 0679 |
| 41 C 0520 | 10 Z 0421 |
| 14 P 0005 | 13 M 0960 |
| 36 M 0123 | 28 R 0165 |
| 03 H 0439 | 05 L 0763 |
| 21 N 0332 | 11 Q 0357 |
| 28 O 0422 | 25 F 0781 |
| 27 Y 0334 | 06 N 0273 |
| 35 P 0442 | 26 S 0074 |
| 11 G 0364 | 48 R 0176 |
| 43 U 0475 | 36 O 0969 |
| 08 R 0524 | 21 L 0615 |
| 49 S 0812 | 24 V 0540 |
| 28 G 0528 | 05 Y 0002 |
| 48 H 0689 | 25 A 0262 |
| 01 K 0919 | 33 J 0958 |
| 39 Y 0362 | 15 X 0001 |
| 26 R 0141 | 19 V 0667 |
| 47 U 0742 | 23 R 0364 |
| 30 O 0813 | 45 [illegible] 0331 |
| 17 V 0889 | 02 Y 0098 |
| 48 [illegible] 0190 | 37 F 0662 |
| 17 K 0014 | 04 D 0685 |
| 00 V 0960 | 12 B 0236 |
| 26 L 0632 | 01 B 0646 |
| 09 V 0667 | 30 W 0077 |
| 14 T 0692 | 18 R 0560 |
| 27 D 0980 | 16 K 0310 |
| 09 D 0821 | 30 O 0329 |
| 23 W 0265 | 44 K 0438 |
| 42 J 0519 | 03 U 0041 |
| 39 C 0511 | 25 T 0163 |
| 33 C 0527 | 19 B 0263 |
| 14 D 0175 | 25 V 0797 |
| 21 J 0912 | 29 D 0529 |
| 01 S 0857 | 20 V 1000 |
| 35 U 0229 | 32 U 0650 |
| 31 [illegible] 0677 | 10 O 0826 |
| 46 P 0253 | 27 K 0632 |
| 29 X 0799 | 19 M 0285 |
| 30 0719 | 27 [illegible] 0660 |
| 25 P 0691 | 10 Z 0958 |
| 20 S 0792 | 32 K 0770 |
| 17 V 0426 | 19 K 0078 |
| 08 I 0368 | 44 A 0770 |
| 14 N 0313 | 45 A 0318 |
| 13 G 0716 | 09 F 0934 |

## இந்திய . . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

றுக்கொண்டு அவர் தமது ராஜினமாவை பிரதமரிடம் சமர்ப்பித்திருக்கிறார். திரு. ஸி. ஆர். பட்டாபி ராமன், திருமதி சௌந்தரம் ராமச்சந்திரன், திரு. ஒ. வி. அளகேசன் ஆகியோரும், லோக சபைக்குப் போட்டியிட்ட தமிழ்நாடு தொழில் மந்திரி திரு. ஆர். வெங்கட்ராமனும் தோல்வியடைந்துள்ளனர். புதுச்சேரியிலிருந்து திரு. சேதுராமன் காங்கிரஸ் லோக சபைக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். மைசூர் ராஜ்ய மந்திரி எம். வி. கிருஷ்ணப்பாவும் திட்டக்கமிஷன் முன்னாள் உறுப்பினர் வி. கே. ஆர். வி. ராவும் லோகசபைக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

ஹரியாணுவில் ஜனசங் அபேட்சகராகப் போட்டியிட்ட சுவாமி ராமேஷ்வரானந்த் தோல்வியடைந்தார். காங்கிரஸிலிருந்து விலகி போட்டிக் காங்கிரஸ் அமைத்த முன்னாள் மந்திரி ஹுமாயீன் கபீர் வெற்றி பெற்றுள்ளார்.

மட்டக்களப்பு

## மாநகரசபைத் தேர்தலில் மாணிக்கத்தின் மகள்

### அபேட்சகராக நிறுத்த தமிழரசு செயற்குழு யோசனை

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டங்களுக்குச் சமூகம் கொடுக்காதிருக்கும் அங்கத்தவர்கள் மீதும் முக்கியமாக எம். பி. க்கள் மீது கட்சி நடவடிக்கை எடுப்பதுபற்றி நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுக்கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்ற மேற்படி கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் விசேஷமாக ஆராயப்பட்டது.

கட்சித்தலைவர் டாக்டர் நாகநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு மட்டுநகர் எம். பி. திரு. செ. இராஜதுரை, மன்னர் எம். பி. அழகக்கோன், திருகோணமலை எம். பி. திரு. மாணிக்கராஜா ஆகியோர் சமூகம் கொடுக்கவில்லை. அமைச்சர் திருச்செல்வமும் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

அண்மையில் மட்டக்களப்பில் நடைபெறவிருக்கும் மாநகரசபைத் தேர்தலுக்கு தமிழரசுக்கட்சியின் சார்பில் வேட்பாளர்களைத் தெரிவதற்கு செயற்குழுவிலிருந்து ஒரு உபகுழுவைத்தெரிவதெனவும் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிகின்றது. செனட்டர் திரு.மாணிக்கம் தமிழரசுக் கட்சியிலிருந்து விலகியுள்ளபோதிலும் அவரது மகளும் மட்டக்களப்பு தமிழரசு மாதர் முன்னணியின் தலைவியுமான செல்வி கலா மாணிக்கம் கட்சியிலேயே இருப்பதால் அவரை மட்டக்களப்பு மாநகசபைத் தேர்தலில் தமிழரசு வேட்பாளராக விடுவதுபற்றியும் ஆராயப்பட்டதாகத் தெரிகின்றது. கூட்டம் இன்று காலையும் தொடர்ந்துநடைபெறுகின்றது.

[ந. நி.]

### அரிசியில்புழு

மாவிட்டபுரம், வெள்ளி

கூப்பன் அரிசியில் புழுக்கள் நிறைந்து காணப்படுகின்றன. வலி வடக்கு காரியாதிகாரி பிரிவில் உள்ள மக்கள் இதனல் பெரிதும்பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த வாரம் விநியோகிக்கப்பட்ட கூப்பன் அரிசி சக்குப் பிடித்து புழுக்களுடன் விநியோசிக்கப்பட்டது. ஏராளமான மக்கள் வலி-வடக்கு காரியாதிகாரி திரு. வி. முருகேசபிள்ளையிடம் இது பற்றி முறையிட்டனர். காரியாதிகாரி இது பற்றி வலி-வடக்கு கூட்டுறவு சமாஜத்தில் விசாரித்தார். இந்த வாரத்துக்கும் அடுத்த வாரத்துக்கும் என விநியோகிக்கப்பட்டுள்ள இரண்டு லட்சம் இருத்தல் அரிசி இந்த நிலையிலே தான் இருக்கிதென்று தெரிவிக்கப்பட்டது.

காரியாதிகாரி யாழ். உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு இது பற்றி தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்துள்ளார்.

## மதுவிலக்கு, குதிரை பந்தயத் தடை

தமிழ்நாட்டில் மதுவிலக்குக்கொள்கையை இன்னும் சரியானமுறையில் செயல்படுத்தக்கூடியவகையில் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் குதிரைப்பந்தயம் தடைசெய்யப் படுமென்றும் திரு. அண்ணுதுரைகூறினர். எதிலும் பிடிவாதமாகஇருப்பது தமதுகொள்கையில்லாவிடினும் மது விலக்கைச் சரியானமுறையில் அமுல்நடத்துவதென்றும் குதிரைப் பந்தயத்தைத் தடைசெய்வதென்றும் கழகம்ஏற்கனவே உறுதியளித்திருக்கிறது என்றுஅவர்சொன்னர். பஸ் போக்குவரத்துச் சேவை தேசிய மயமாக்கப்படுமென்றும் அவர் கூறினர்.

## ஆங்கிலமே இணைப்பு மொழியாக நீடிக்கட்டும்

ஆங்கிலமே மத்திய அரசாங்கத்துக்கும் தமிழ்நாட்டு அரசாங்கத்துக்கும் இணைப்பு மொழியாக நீடிக்கவேண்டுமென்றும் பதினன்கு பிராந்திய மொழிகளுக்கும் ஆட்சி மொழி அந்தஸ்து வழங்கப்படவேண்டுமென்றும் இதுவே தங்கள் கொள்கையென்றும் திரு. அண்ணதுரை கூறினர். ராஜ்ய அரசாங்கங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படுவது பற்றி ஆராய்ந்து ஒரு முடிவு செய்யும்பொருட்டு அரசியல் கமிஷன் ஒன்றைநியமிக்கப்படவேண்டுமென மத்தியஅரசாங்கத்தைக்கோரப் போவதாகவும் அவர் கூறினர்.

## "வடநாட்டார் பயமின்றி தமிழ்நாட்டில் வாழலாம்"

**தமிழரசுக் கட்சியின்-...**

[2ம்-பக்கத் தொடர்ச்சி]

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில் தலைவர்கள் தமது கருத்து வேறுபாடுகளைக் கொட்டிச் சிதறித் தமிழ் பேசும் இனத்தின் வருங்காலத்தைக் கெடுத்துவிடக்கூடாது. தமிழ்த் தலைவர்களிடம் பொறுப்பு உணர்ச்சியையே தமிழினம் எதிர்பார்க்கி என்றார்.

இலங்கைத் தொழிலாளர் கழகச் செயலாளர் திரு. எஸ். கலிய பெருமாள் பேசுகையில், மலைய மக்களுக்கு விமோசனம் அளிக்கக்கூடியது தமிழரசுக் கட்சிதான் என்ருர்.

**நல்ல பாடம**

திரு. எம். எஸ். குணராஜா பேசுகையில், இன்று ஏற்பட்டிருக்கும் இந்தியர் பிரச்னைக்கு திரு. காமராஜரும் திரு. பக்தவத்சலமும் தான் காரணகர்த்தாக்கள் என்ருர். அவர்களுக்குத் தமிழ்நாட்டு மக்கள் நல்ல பாடம் படிப்பித்துவிட்டார்கள் என்றும் அவர் சொன்னர்.

திரு. ஆ. ஹென்றி பேசுகையில், சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியினர் இடதுசாரிகளுடன் சேர்ந்து அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தை சாதிஅடிப்படைப் போர்வையில் நடத்தப்பார்க்கிருர்கள். இதற்குத் தமிழ்மக்கள் இடம் கொடுக்கக்கூடாது என்று கூறினர்.

செனட்டர் சு. நடராசா பேசுகையில், இலங்கை— இந்திய ஒப்பந்த அமுல் மசோதா பற்றி திரு. நவரத்தினத்துக்கும், செனட்டர் திரு. மாணிக்கத்துக்கும் இடையே தமிழரசுக்கட்சி தவறிழைத்துவிட்டதாகக் குற்றம்சாட்டுவதில் அர்த்தம் இல்லை. திரு நவரத்தினம் தமது கருத்தை முதலில் கட்சிக்குத் தெரிவித்தார். அது பற்றி நாம் விவாதித்தோம், கருத்துப் பரிமாறல் மூலம் அவரது நடவடிக்கையை அறிந்துகொள்ள முடிந்தது. ஆனல் செனட்டர் மாணிக்கம் இக்கூட்டங்களில் கலந்து பசாமல் இருந்துவிட்டுச் சிலதினங்களுக்கு முன் மசோதாவை எதிர்க்கப்போவதாகவும் கட்சியிலிருந்தும் செயற்குழுவிலிருந்தும் விலகப்போவதாகவும் பத்திரிகைகளுக்கு அறிக்கைவிட்டார். இந்த நிலையில் அவரைப் பதவியிலிருந்து வெளியேறுமாறு கேட்டுக்கொள்வதைத்தவிர வேறு வழி எமக்கில்லை என்று கூறினர்.

எந்த விஷயத்திலும் எவர் மீதும் தனிப்பட்ட முறையில் துவேஷமோ, குரோதமோ தமக்கில்லையென்று திரு. அண்ணுதுரை தெரிவித்தார். தமிழ் நாட்டில் வாழும் வடநாட்டு மக்கள் அச்சமின்றி தமிழ் நாட்டில் வாழலாமென அவர் சொன்னர். தனித் திராவிடநாடு கோரிக்கையை தாம் மீண்டும் எழுப்பப்போவதில்லை என்றும் அவர் கூறினர். காங்கிரஸ் அக்கராசனர் திருகாமராஜரின் தோல்வி தமக்குப் பெரும் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் அளித்ததாகவிம் அவர் சொன்னர். தமது மந்திரி சபையில் கூட்டணிவயச் சேர்ந்தவர்கள் எவரும் இடம்பெறுவதற்கான வாய்ப்பு ஏதுமில்லையென்றும் முதுபெரும் அரசியல் அறிஞரான ராஜாஜியின் ஆலோசனையை, அரசசங்கம் அமைப்பது சம்பந்தமாகவும் இதர விஷயங்கள் குறித்தும் நாடப்போவதாகவும் திரு. அண்ணுதுரைதெரிவித்தார். தமது மந்திரிசபை பதவியேற்பதற்கு இன்னும் ஒரு மாதமாவது தேவைப்படும் என்றும் அவர் கூறினர்.

**தி.மு க. அரசாங்க ....**

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தமிழ்நாட்டில் உணவுப் பொருள் விலைகளைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுப்பதே தமது மந்திரி சபையின் முதல் வேலையாக இருக்குமென்றும் உணவுப் பொருள் உற்பத்தியாளருக்கு ஊக்கம்அளிப்பதற்கான திட்டம்ஒன்றை தமது அரசாங்கம் வகுக்குமென்றும் திரு. அண்ணுதுரைகூறினர்.

### சமவெற்றி

முள்ளியவளை, வெள்ளி

முள்ளியவளைகிராமச்சங்க பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டி 2-2 கோல்களால் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. மேற்படி உதைபந்தாட்டம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த "டைர்" கிளப்புக்கும் முல்லைத்தீவு, முள்ளியவளை மாணவர்களுக்குமிடையே நடைபெற்றது.

**மாணிக்கம செய்தி**

இக்கூட்டத்துக்கு செனட்டர் மாணிக்கம் அனுப்பியுள்ள செய்தியில், 'கட்சிக் கொள்கைகளை இதுவரை மீருத நான் எதிர்காலத்திலும் இந்த இலட்சியங்களைக் கைவிடமாட்டேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org